செய்தி வெளியீடு எண்:305 நாள் : 25.06.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.6.2015) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் கரூர், திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய இடங்களில் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் தருமபுரி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கான கூடுதல் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

குறைந்த முதலீட்டில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதன் மூலம் கிராமங்கள், சிறு நகரங்கள் மற்றும் தொலை தூரப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் அந்தந்த பகுதிகளில் காலங்காலமாய் மேற்கொள்ளப் பட்டு வரும் பாரம்பரிய தொழில் முறைகளை பேணி காப்பதிலும் பெரும் தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமாய் விளங்குகின்ற உப பொருட்களை தயாரித்து வழங்குவதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த தொழில் வளர்ச்சியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு ஈடு இணையற்றதாகும்.

இத்தகைய சிறப்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் படித்த இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளித்து அவர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோராக உருவாக்கிடுதல், சிறுதொழில் முனைவோருக்கு வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப பயிற்சி அளித்திடத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் பயிற்சி வளாகம் கட்டுதல், மாவட்ட தொழில் மையங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கரூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் தலா 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒவ்வொரு கட்டடமும் தரை மற்றும் முதல் தளத்துடன் 5400 சதுர அடி கட்டட பரப்பளவில், கூட்டரங்கம், உற்பத்தி பொருட்கள் காட்சி மையம், அலுவலர் அறைகள், கணினி அறை, பயிற்சி அறை, உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் மொத்தம் 4 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட தொழில் மைய அலுவலகக் கட்டடங்கள்;

தருமபுரி, ஈரோடு, சிவகங்கை, திருநெல்வேலி, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் மொத்தம் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மையங்களுக்கான கூடுதல் அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 14 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கூடுதல் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ப.மோகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப,, தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு குமார் ஜயந்த், இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு ஜக்மோகன் சிங் ராஜு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 25.6.2015**